Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 27.03.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 27.03.2026 – வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

வலுவான, சுயசார்பு இந்தியா ஒன்றை உருவாக்குவதில் மின் பொறியியல் உள்ளிட்ட துறைகளுக்கு முக்கிய பங்கு இருப்பதாக, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

பெட்ரோல் – டீசல் மீதான கலால் வரி குறைக்கப்பட்டு இருப்பதை, பல்வேறு மத்திய அமைச்சர்கள் வரவேற்றுள்ளனர்.

மத்திய அரசு, மாநிலங்களுக்கான வர்த்தக எல்பிஜி ஒதுக்கீட்டை 70 சதவிகிதமாக உயர்த்த தீர்மானித்துள்ளது.

தமிழ்நாடு - புதுச்சேரி உட்பட சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள அனைத்து 5 மாநிலங்களிலும், தேர்தல் ஆணையம், ஸ்வீப் திட்டத்தின் கீழ், விரிவான தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

*முர்மு சந்திப்பு (11)*

மத்திய மின்சார பொறியியல் சேவை மற்றும் இந்திய பொருளாதார சேவை அதிகாரிகள், இன்று, புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவை சந்தித்தனர். இந்தியாவின் வளர்ச்சியை முன்நின்று வழிநடத்திச் செல்வதே, இத்தகைய அதிகாரிகள்தான் என்றும், இவர்களின் உறுதியான முடிவுகள், வலுவான சுயசார்பு இந்தியா ஒன்றை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றும் என்றும் குடியரசுத் தலைவர் கூறினார். தொழில் வளர்ச்சிக்கும், நாட்டின் ஒட்டுமொத்த சமூக பொருளாதார மேம்பாட்டிற்கும், மின்சாரம்தான் அடிப்படை என்பதையும், மாறி வரும் உலக மற்றும் உள்நாட்டுச் சூழலில் பொருளாதார திட்டமிடல் மற்றும் அமலாக்கப் பணிகள் மிக முக்கியமானவை என்பதையும் குடியரசுத் தலைவர் சுட்டிக் காட்டினார்.

*மோடி அயோத்தி (11)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள தமது அலுவலகத்தில் இருந்து, தொலைக்காட்சி மூலம், அயோத்தி ராமர் கோவில் **சூரிய திலக் பூஜையை** பார்வையிட்டு, பகவான் ஸ்ரீராமரை வழிபட்டார். ஸ்ரீராம நவமி திருநாளை ஒட்டி, நேற்று நாட்டு மக்களுக்கு அவர் வெளியிட்ட செய்தியில், எளிமை, தியாகம், கட்டுப்பாடு நிறைந்த பகவான் ஸ்ரீராமரின் வாழ்க்கை, எல்லா சூழல்களையும் முழு வலுவுடன் எதிர்கொள்ளத் தேவையான உணர்வூக்கமாக திகழும் என்று கூறினார். இன்று அயோத்தியில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் சரயு நதியில் புனித நீராடி, பகவான் ஸ்ரீராமரை தரிசித்தனர். அயோத்தி நகரம் முழுவதும், ராம் பஜன் கீர்த்தனைகள் ஒலித்த வண்ணம் உள்ளன. சித்ரகூட் மந்தாகினி ஆற்றில் இன்று மாலை, 22 லட்சம் தீபங்களை ஏற்றி வழிபடும் விழாவும், விமர்சையாக நடைபெற உள்ளது.

மேற்காசிய நெருக்கடியால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை உயர்ந்து வரும் நிலையில், மத்திய அரசு, பெட்ரோல் – டீசல் மீதான கலால் வரியை குறைத்து இருப்பது, சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட – சரியான நடவடிக்கை என்று, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். மேற்காசிய நெருக்கடியால் பாதிக்கப்பட்ட வேறு பல நாடுகளின் எரிபொருள் விலை உயர்த்தப்படும் நிலையில், இந்தியாவில் கலால் வரி குறைக்கப்பட்டு இருப்பது, மக்கள் நலனில் அரசுக்கு உள்ள உறுதியான அக்கறையின் வெளிப்பாடு என்று சமூக ஊடகத்தில் அவர் கூறியுள்ளார். வேறுபல மத்திய அமைச்சர்களும் அரசின் முடிவை வரவேற்றுள்ளனர். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு…

(வாய்ஸ்)

**(வாய்ஸ்)**

பெட்ரோல்- டீசல் மீதான வரி குறைப்பை வரவேற்று, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், உலக நெருக்கடியில் இருந்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, மத்திய அரசு, நிதி இழப்பை தானே ஏற்பதாகக் கூறியுள்ளார். பெட்ரோல் – டீசல் மீதான கலால் வரி குறைக்கப் பட்டு, டீசல் மற்றும் விமான எரிபொருள் மீது, ஏற்றுமதி வரியும் விதிக்கப் பட்டுள்ளதால், உள்நாட்டில் எரிபொருள் வரத்து உறுதிப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மக்களை மையமாகக் கொண்ட அரசின் அணுகுமுறைக்கும், மக்களின் வாழ்வை எளிதாக்குவதில் அரசுக்குள்ள அக்கறைக்கும் இதுவே சான்றாகும் என்று, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சமூக ஊடகத்தில் கூறியுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தொழில் வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் உட்பட பலரும், பெட்ரோல் – டீசல் மீதான வரி குறைப்பை வரவேற்றுள்ளனர்.

மத்திய அரசு, மாநிலங்களுக்கான வர்த்தக எல்பிஜி ஒதுக்கீட்டை 70 சதவிகிதமாக உயர்த்த தீர்மானித்துள்ளது. இதில் 20 சதவிகிதம், தொழிலாளர் தேவை அதிகமுள்ள ஜவுளி, இரும்பு-எஃகு, மோட்டார் வாகன உற்பத்தி உள்ளிட்ட துறைகளுக்கு ஒதுக்கப்படும் என, மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி, இன்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். குழாய் மூலமான எரிவாயுவிற்கு மாற முடியாத நிலையில் உள்ள துறைகளுக்கு, வர்த்தக எல்பிஜி ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். உலகில் இந்தியா அல்லாத மற்ற நாடுகள், எரிபொருள் நுகர்வை குறைக்கும் வகையில், வாரம் 4 நாள் வேலை, பள்ளி – கல்லூரி மூடல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், இந்தியாவில் மட்டும்தான் எரிசக்திப் பாதுகாப்பு நீடிப்பதாக, அமைச்சர் கூறியுள்ளார். தற்போது மட்டுமின்றி, ரஷ்யா – உக்ரைன் பிணக்கு தொடங்கியது முதல் கடந்த 4 ஆண்டுகளாகவே, கச்சா எண்ணெய் விலை உயர்வால் ஏற்படும் நிதி இழப்பை, மத்திய அரசு மக்கள்மீது மாற்றாமல் தானே ஏற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

***லாக் டவுன் (13)***

இந்தியாவில் லாக் டவுன் வரக்கூடும் என்பதாக வெளியாகி வரும் வதந்திகள் முற்றிலும் பொய்யானவை என்றும், அத்தகைய எந்தவொரு உத்தேசமும் அரசின் பரிசீலனையில் இல்லை என்றும், மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார். சர்வதேச நிலவரங்கள் மாறிவரும் நிலையில், புதிய சவால்களை எதிர்கொள்ள இந்தியா தயாராகவே உள்ளதாக, சமூக ஊடகப் பதிவில் அவர் கூறியுள்ளார். எரிசக்தி, பொருள் விநியோகச் சங்கிலிகள் மற்றும் அத்தியாவசிய பண்டங்களின் விலையில் ஏற்படும் மாற்றங்களை அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாக, அவர் தெரிவித்துள்ளார். எரிபொருள் மற்றும் இதர பொருட்கள் தடையின்றி மக்களுக்கு கிடைப்பதை அரசு உறுதிப்படுத்தும் என்பதால், மக்கள் பொறுப்புடன், அமைதியாகவும், ஒற்றுமையாகவும் இருக்க வேண்டும் என்று அமைச்சர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியாவில் தற்போது கச்சா எண்ணெய் கையிருப்பு போதிய அளவில் இருப்பதாகவும், அடுத்த 2 மாதங்களுக்கு, தேவையான கச்சா எண்ணெய் கிடைப்பதை அரசு ஏற்கனவே உறுதி படுத்தி இருப்பதாகவும், பெட்ரோலியத்துறை இணைச் செயலர் திருமதி. சுஜாதா ஷர்மா கூறியுள்ளார். மேற்காசிய நிலவரங்கள் குறித்து, சம்மந்தப்பட்ட பல்வேறு அமைச்சகங்கள் இணைந்து, இன்று, புதுடெல்லியில் நடத்திய செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். நாட்டின் LPG மற்றும் PNG நிலவரங்களும் திருப்திகரமாகவே உள்ளதாக அவர் தெரிவித்தார். முன்பு, நாட்டின் 90 சதவிகித எல்பிஜி இறக்குமதி, ஹோர்மூஸ் ஜலசந்தி வழியாக வந்து கொண்டிருந்த நிலையில்தான், எல்பிஜி ஒதுக்கீட்டில், வீட்டு உபயோகத்திற்கு முன்னுரிமை அளிக்கப் பட்டதாகவும், அப்போது குறைக்கப்பட்ட வர்த்தக எல்பிஜி ஒதுக்கீடுகள் படிப்படியாக மீண்டும் உயர்த்தப்பட்டு விட்டதாகவும், அவர் கூறினார்.

இந்தியாவில் போதிய அளவில் எரிபொருள் கிடைப்பதையும், நுகர்வோர் பாதுகாப்பையும் உறுதிப் படுத்தவே, மத்திய அரசு, பெட்ரோல் – டீசல் மீதான கலால் வரியை குறைத்து, டீசல் மற்றும் விமான எரிபொருள் மீது, ஏற்றுமதி வரி விதித்து இருப்பதாக, மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தலைவர் திரு. விவேக் சதுர்வேதி கூறினார். ஏற்றுமதி வரி விகிதங்கள் 2 வாரங்களுக்கு ஒருமுறை, அப்போதைய நிலவரங்களுக்கு ஏற்ப மறு ஆய்வு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

***ஆணையம் விழிப்புணர்வு-1 (3)***

தமிழ்நாடு - புதுச்சேரி உட்பட சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள அனைத்து 5 மாநிலங்களிலும், தேர்தல் ஆணையம் ஸ்வீப் திட்டத்தின் கீழ், விரிவான தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இது குறித்து ஒரு தொகுப்பு...

**(வாய்ஸ்)**

*ஆணையம் விழிப்புணர்வு-2 (12)*

(வாய்ஸ்)

ஸ்வீப் என்னும் முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்குவங்க மாநிலம், ஹவுராவில் இன்று காலை நடைபெற்ற சைக்கிள் பேரணியில், ஏராளமான மாணவர்கள் மற்றும் இளம் வாக்காளர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். மேற்குவங்க பாரம்பரியத்தின் அடிப்படையில், பல்வேறு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. தேர்தலில் அதிகபட்ச வாக்குப் பதிவை உறுதிப் படுத்தும் நோக்கத்திலான, தேர்தல் ஆணையத்தின் விழிப்புணர்வு இயக்கத்தில், இம்முறை புதிதாக அமலாகும், நடைமுறைகள் குறித்தும் மக்களுக்கு எடுத்துக் கூறப்படுகிறது. வாக்குச் சாவடிக்கு வெளியே கைபேசிகளை பத்திரமாக விட்டுச் செல்லும் வசதி, ஈசி-நெட் மொபைல் செயலி, மேம்படுத்திய வாக்காளர் தகவல் சீட்டு உள்ளிட்ட அம்சங்கள் இதில் அடங்கும்.

***புதுச்சேரி விழிப்புணர்வு (6)***

புதுச்சேரியில் மருந்துக் கடைகள் மூலம் பொதுமக்களுக்கும், உரக் கடைகள் மூலம் விவசாயிகளுக்கும் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள போஸ்டர்களை மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன் இன்று வெளியிட்டார். மாநில மருந்து வணிகர் சங்க நிர்வாகிகள் மற்றும் உரக் கடை உரிமையாளர் சங்க நிர்வாகிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*காரைக்கால் விழிப்புணர்வு (6)*

காரைக்காலில் 100 சதவிகித வாக்குப் பதிவை வலியுறுத்தி, தேர்தல் ஆணையத்தின் ஸ்வீப் திட்டத்தின் கீழ், திருநங்கைகளின் பங்கேற்புடன் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியை, மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி. இஷிதா ராட்டி, தேர்தல் பார்வையாளர் திருமதி. சனிதா பாலா ஓம் பிரஜாபதி ஆகியோர் பார்வையிட்டு, திருநங்கைகளின் சமூக பொறுப்புணர்வை பாராட்டினர்.

*மாஹே (7)*

தேர்தலில் வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து, மாஹேயில் தேர்தல் ஆணையத்தின் ஸ்வீப் திட்டத்தின் கீழ், ஆற்றங்கரை நடைபாதையில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் கையெழுத்து இயக்கத்தை, மண்டல நிர்வாக அதிகாரியும், தேர்தல் நடத்தும் அதிகாரியுமான திரு. அங்கித் குமார் தொடக்கி வைத்தார். கணிசமான எண்ணிக்கையில் வாக்காளர்கள் இதில் கலந்து கொண்டு, தேர்தலில் தவறாமல் வாக்களிக்க உறுதி ஏற்றனர்.

***வில்லியனூர் – திமுக (7)***

புதுச்சேரி வில்லியனூர் சட்டமன்றத் தொகுதியில், மாநிலத் திமுக அமைப்பாளரும் – வேட்பாளருமான திரு. ஆர்.சிவா, இன்று வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார். புதுச்சேரியில் கூட்டணி தர்மத்தை காங்கிரஸ் மீறிவிட்டதாக, இடது சாரிகள் குற்றம் சாட்டியிருப்பது குறித்து, செய்தியாளர்கள் திரு. சிவாவிடம் கருத்து கேட்டதற்கு, திமுக போட்டியிடும் 13 தொகுதிகளில், தற்போதுள்ள கூட்டணி அடிப்படையில், ஓட்டு சேகரிக்கப்படும் என்றும், எல்லா சதிகளையும் திமுக முறியடிக்கும் என்றும், அவர் பதிலளித்தார்.

*வானொலி பிரச்சாரம் (16)*

புதுச்சேரியில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில கட்சிகள் ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் மூலமாக, தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள தேர்தல் ஆணையம் மொத்தம் 162 நேரப் பற்றுச் சீட்டுகளை விநியோகித்து உள்ளது. கடந்த தேர்தலில், பல்வேறு கட்சிகள் பெற்ற வெற்றியின் அடிப்படையில், கட்சிவாரியான பற்றுச் சீட்டுகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப் பட்டு, தேர்தல் ஒலிபரப்பு மற்றும் ஒளிபரப்பிற்கான நேரம் குலுக்கல் முறையில், ஒதுக்கீடு செய்யப்பட்டன. இதன்படி, என்.ஆர். காங்கிரசுக்கு 35 பற்றுச் சீட்டுகளும், திமுகவிற்கு 28, காங்கிரஸ் கட்சிக்கு 25, பாரதிய ஜனதாவிற்கு 23 மற்றும் அஇஅதிமுகவிற்கு 13 பற்றுச் சீட்டுகளும், பகுஜன் சமாஜ், சிபிஎம், ஆம் ஆத்மி, NPEP ஆகிய கட்சிகளுக்கு தலா 9 பற்றுச் சீட்டுகளும் ஒதுக்கப் பட்டுள்ளன. ஒவ்வொன்றும் 5, 4 மற்றும் 1 நிமிட அளவுள்ள இந்த பற்றுச் சீட்டுகளை அரசியல் கட்சிகள் வரும் 30ஆம் தேதி முதல், ஏப்ரல் 5ஆம் தேதி வரை, வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமான தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

*சந்திப்பு (12)*

புதுச்சேரி பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு இன்று, புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவரும் – பல்கலைக் கழக வருகையாளருமான திருமதி. திரவுபதி முர்முவை சந்தித்தார். பல்கலைக் கழகத்தின் உள் கட்டமைப்பு, கல்வி – ஆராய்ச்சி மேம்பாடு, மற்றும் ஓராண்டு சாதனைகள் குறித்து குடியரசுத் தலைவரிடம் அவர் எடுத்துக் கூறினார். தொழில் துறையினர் உடனான ஒருங்கிணைப்பை மேம்படுத்திக் கொள்வதிலும், காப்புரிமை பெறுவதிலும், பல்கலைக் கழகம் காட்டி வரும் ஆர்வத்தையும் அவர் வலியுறுத்தினார். புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள துணை வேந்தர் இந்த சந்திப்பின்போது, குடியரசுத் தலைவருக்கு அழைப்பு விடுத்தார்.

***வானிலை (8)***

இன்று தமிழ்நாடு, மற்றும் புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும் என்றும், நாளை மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளைப் பொறுத்தவரை, ஏப்ரல் 1ஆம் தேதி வரை வறண்ட வானிலை நீடிக்கலாம் என்றும், ஏப்ரல் 2ஆம் தேதி காரைக்கால் பகுதியில் லேசானது முதல் மிதமான மழை இருக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

***தலைப்புச் செய்திகள்***

வலுவான, சுயசார்பு இந்தியா ஒன்றை உருவாக்குவதில் **மின் பொறியியல்** உள்ளிட்ட துறைகளுக்கு முக்கிய பங்கு இருப்பதாக, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

பெட்ரோல் – டீசல் மீதான **கலால் வரி** குறைக்கப்பட்டு இருப்பதை, பல்வேறு மத்திய அமைச்சர்கள் வரவேற்றுள்ளனர்.

மத்திய அரசு, மாநிலங்களுக்கான **வர்த்தக எல்பிஜி ஒதுக்கீட்டை** 70 சதவிகிதமாக உயர்த்த தீர்மானித்துள்ளது.

தமிழ்நாடு - புதுச்சேரி உட்பட சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள **அனைத்து 5** மாநிலங்களிலும், தேர்தல் ஆணையம், **ஸ்வீப்** திட்டத்தின் கீழ், விரிவான **தேர்தல் விழிப்புணர்வு** நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / SM / RK